## சுருக்கம்

பொது விநியோகத் திட்டம் – புதிய முழு நேர நியாயவிலைக் கடைகள் மற்றும் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் தொடங்குவது குறித்து புதிய வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்க பரிந்துரைகள் அளிக்கும்பொருட்டு குழு அமைத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் ( எப்1) துறை

அரசாணை (நிலை) எண்.68 நாள் : 23.08.2021

பிலவ வருடம், ஆவணி–07

திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 11.03.1997.
2. அரசாணை (நிலை) எண்.214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 15.10.1998.
3. அரசாணை (நிலை) எண்.12, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 18.01.2001.
4. அரசாணை(நிலை) எண்.147, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 24.08.2006.
5. அரசாணை (நிலை) எண்.291, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 04.10.2007
6. அரசாணை (நிலை) எண்.112, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (எப்1) துறை, நாள் 21.08.2010.
7. அரசு கடிதம் எண்.5649/சிஐ2/2014–1, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 28.02.2014.
8. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கடித ந.க.எண்.40224/2021/பொவிதிக2, நாள் 26.07.2021 மற்றும் 30.07.2021.

**ஆணை:**

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் புதிய முழு நேர நியாயவிலைக் கடைகள் மற்றும் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் தொடங்குவதற்காக மேலே ஒன்று முதல் ஏழு வரை உள்ள அரசாணைகள் மற்றும்

அரசு கடிதத்தில், பல்வேறு விதிமுறைகள் 1997 முதல் வகுக்கப்பட்டு தற்போது வரை நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. மேலே எட்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கீழ்கண்டவாறு அறிக்கையை அளித்துள்ளார்:–

(1) மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில், 30.06.2021 அன்று வரை தமிழகத்தில் கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 23,504 முழுநேர நியாயவிலைக் கடைகள், 9563 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் மற்றும் 3,550 நகரும் நியாயவிலைக் கடைகள் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்ட பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(2) பொது விநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினிமயமாக்கி அதன் வாயிலாக இன்றியமையா பொருட்கள், உரிய பயனாளிகளுக்கு, உரிய அளவில் முழுமையாக சென்றடைவதனை கண்காணிக்கும் வகையிலும், குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு நிர்வாக முறையில் சேவைகள் வழங்கி, சேவைத்தரத்தினை மேம்படுத்தும் வகையிலும் உரிய திட்டம், நிகழ்நிலையில் (Online) பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் அனைத்தும் நவம்பர் 2016 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு விற்பனை முனைய கருவி மூலம் (Point of Sale) குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்ட பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை (One Nation One Ration Card) திட்டத்தின் மூலம் பல மாநிலங்களிலிருந்து இடம்பெயரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்ட பலன்கள் கிடைக்க ஏதுவாக 01.10.2020 முதல் கைரேகை பதிவு (Bio–Metric Finger Print) மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

(3) அரசாணை (நிலை) எண்.124, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (பி1) துறை, நாள் 27.10.2016–இன் மூலம் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம், 2013, 01.11.2016 முதல் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் மூலம் முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் (PHH), குழந்தைகள் உட்பட, பிரதி மாதம் 5 கிலோ ஒரு நபருக்கு என்ற அளவிலும், அக்குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப எவ்வித உச்சவரம்பும் இன்றி அரிசியினை மானிய விலையில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், தமிழக அரசின் சிறப்பு திட்டங்களான பொங்கல் பரிசுத் தொகுப்பு, கொரோனா நிவாரண நிதி, இலவச வேட்டி சேலை மற்றும் கொண்டைக்கடலை, கூடுதல் இலவச அரிசி ஆகிய திட்டங்கள் நியாயவிலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(4) அனைத்து புதிய மற்றும் பழைய திட்டங்கள் நியாயவிலைக்கடைகள் மூலமாக செயல்படுத்தப்படும் போது, மக்கள்தொகைப் பெருக்கத்தினால் புதிய குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்லும் நிலையில், மேற்கண்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் நியாயவிலைக் கடைகளில் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்கையில், நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், புதிய நியாயவிலைக் கடைகள் திறக்க இயலாத சூழல் ஏற்படுகிறது.

3. மேலே பத்தி-2இல் குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில், தற்போது நியாயவிலைக் கடைகளின் மூலமாக பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் நிலையிலும், நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க அவசியம் ஏற்பட்டுள்ள நிலையிலும், மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மறுபரிசீலனை செய்ய ஏதுவாக ஒரு குழுவினை அமைத்து புதிய முழு நேர / பகுதி நேர நியாயவிலைக் கடை திறப்பதற்கான விதிமுறைகளை தற்போதுள்ள காலநிலை மாற்றத்தின் அடிப்படையிலும், மக்கள் தொகை பெருக்கத்தின் அடிப்படையிலும், தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலும், தற்போதுள்ள சூழ்நிலைக்கேற்ப முழு நேர மற்றும் பகுதி நேர நியாயவிலைக்கடைகள் திறப்பதற்கான புதிய விதிமுறைகளை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது என்றும், எனவே, இதற்கென குழு ஒன்றை அமைத்து, புதிய முழு நேர நியாயவிலைக் கடைகள் மற்றும் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறத்தல் தொடர்பாக, புதிய வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கலாம் என கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

4. புதிய முழு நேர நியாயவிலைக் கடைகள் மற்றும் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகளை தொடங்குவது குறித்த புதிய வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க தகுந்த பரிந்துரைகள் செய்ய பின்வரும் அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைக்கலாம் என கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

1) உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர்,
2) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
3) நிருவாக அலுவலர்,
   தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
4) மாவட்ட ஆட்சித் தலைவர்,
   திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
5) மாவட்ட வருவாய் அலுவலர் /
   இணை ஆணையர் (நில நிர்வாகம்),
   நில நிர்வாக ஆணையரகம்.

தேவைப்படும் நேர்வுகளில் அழைத்து கருத்துகளைக் கேட்டறிந்து குழுவினர் முடிவெடுக்க ஏதுவாக, மேற்காணும் உறுப்பினர்களுடன், கீழ்க்குறிப்பிட்ட

அலுவலர்களை, உத்தேசிக்கப்படும் குழுவில் சிறப்பு அழைப்பாளர்களாக நியமித்து ஆணை வழங்கலாம் என்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

- முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர்,
  சென்னை–15.
  (மலைப்பகுதிகளில், நியாயவிலைக் கடைகள் மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் தொடங்குவது குறித்து கருத்து அளிக்கும் பொருட்டு.)
- மேலாண்மை இயக்குநர்,
  தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
  (மகளிரால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் அமைப்பது குறித்து கருத்து அளிக்கும் பொருட்டு.)
- செயலாளர்,
  தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்பு குழு,
  நெ.7, 12–வது குறுக்கு தெரு,
  குமரன் நகர், ஸ்ரீநிவாசா நகர் வடக்கு,
  தில்லை நகர், திருச்சி–17.

5. மேலே பத்தி 3 மற்றும் பத்தி 4 இல் உள்ள கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, புதிய முழு நேர நியாயவிலைக் கடைகளையும், பகுதி நேர நியாயவிலைக் கடைகளையும் தொடங்குவது குறித்த புதிய வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க அரசுக்கு தகுந்த பரிந்துரைகளை அளிக்க கீழ்காணும் அலுவலர்களைக் கொண்ட குழுவினை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

<u>குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்:–</u>

| | | |
|---|---|---|
| 1. | ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை. | தலைவர் |
| 2. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர். | உறுப்பினர் |
| 3. | நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம். | உறுப்பினர் |
| 4. | அரசின் நிதித்துறையின் பிரதிநிதி, நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9. | உறுப்பினர் |
| 5. | மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | உறுப்பினர் |
| 6. | மாவட்ட வருவாய் அலுவலர் / இணை ஆணையர் (நில நிர்வாகம்), நில நிர்வாக ஆணையரகம், சென்னை–5. | உறுப்பினர் |
| 7. | செயலாளர், தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்பு குழு, நெ.7, 12–வது குறுக்கு தெரு, குமரன் நகர், ஸ்ரீநிவாசா நகர் வடக்கு, தில்லை நகர், திருச்சி–17. | உறுப்பினர் |

மேலும், மேற்கூறிய குழுவினர், தேவைப்படும் நேர்வுகளில் கருத்துகளைக் கேட்டறிந்து முடிவெடுக்க ஏதுவாக, மேற்காணும் உறுப்பினர்களுடன், கீழ்க்குறிப்பிட்ட அலுவலர்களை, சிறப்பு அழைப்பாளர்களாக நியமித்தும் அரசு ஆணையிடுகிறது.

சிறப்பு அழைப்பாளர்கள்:-

1) முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர்,
சென்னை-15.
(மலைப்பகுதிகளில், நியாயவிலைக் கடைகள் மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் தொடங்குவது குறித்து கருத்து அளிக்கும் பொருட்டு.)
2) மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை-34.
(மகளிரால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் அமைப்பது குறித்து கருத்து அளிக்கும் பொருட்டு.)

6. மேற்காணும் குழுவானது, புதிய முழு நேர நியாயவிலைக் கடைகள், புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் மற்றும் மலைப்பிரதேசங்களில் செயல்படும் நகரும் நியாயவிலைக் கடைகள் ஆகியவை அமைப்பதற்கு தற்போது உள்ள விதிமுறைகளை ஆய்வு செய்து, விரிவடைந்து வரும் நகரமயமாக்கல் உள்ளிட்ட மாற்றங்களுக்கு ஏற்ப, புதிய முழு நேர நியாயவிலைக் கடைகள், புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் மற்றும் மலைப்பிரதேசங்களில் செயல்படும் நகரும் நியாயவிலைக் கடைகள் ஆகியவற்றை திறப்பதற்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க தகுந்த பரிந்துரைகளை அரசுக்கு மூன்று மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை, சென்னை-5.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை-10.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
சென்னை-10.
அரசின் நிதித்துறையின் பிரதிநிதி,
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
மாவட்ட வருவாய் அலுவலர் / இணை ஆணையர் (நில நிர்வாகம்),
நில நிர்வாக ஆணையரகம், சென்னை-5.

செயலாளர்,
தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்பு குழு, நெ.7, 12-வது குறுக்கு தெரு, குமரன் நகர், ஸ்ரீநிவாசா நகர் வடக்கு,
தில்லை நகர், திருச்சி-17.
முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர், சென்னை-15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை-34.

நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை-9
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நிதி (கூ.உ.(ம) நு.பா) துறை , சென்னை-9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிநகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தி.சந்நி
23/8/2021
பிரிவு அலுவலர்.

அ.டே
23.8.2021